# கற்பகம்
திங்கள் இதழ்
Katpakam
விலை ரூபா 10.00


## குறளமுதம்-64

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்-6 அறத்துப்பால் மக்கட்பேறு**

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்

தம் மக்களின் சிறு கைகளால் துழாவிக் குழைக்கப்பட்ட உணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தை விட இனிமையுடையதாகும்.


மலர்-06 மார்ச்-2013 இதழ்-64


### பனை தென்னை வள நிறுவனங்களுடன்

# நாம் நெகிழ்வுப்போக்கை கைக்கொள்ள வேண்டும்!

### மதுவரி உதவி ஆணையாளர் தெரிவிப்பு!



பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 2013ம் ஆண்டுக்கான செயற்பாடுகள் தொடர்பாக சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்றை யாழ். கூட்டுறவுத் திணைக்களமும் மதுவரித் திணைக்களமும் இணைந்து இம்மாதம் 1ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. வீ.கே. அருந்தவநாதன் அவர்கள் தலைமையில் நடத்தியிருந்தன.

இதில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம், மதுவரித் திணைக்களத்தின் வடமாகாண உதவி ஆணையாளர் திரு கிறிஸ்டி மற்றும் பிராந்திய மதுவரிப்


(3ம் பக்கம் பார்க்க)


## நிதிப்பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கமானது கடந்த 2005ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையில் தனது உறுப்பினர்களுக்கு பல்வேறு நிதிக் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது.

இதில் மங்கள நிதி, கல்வி நிதி, மருத்துவ நிதி, அமங்கள நிதி ஆகிய நிதிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மேற்படி திட்டத்தின் மூலம் கடந்த 31.12.2012 வரையில், மங்கள நிதி 103 உறுப்பினர்களுக்கும், கல்வி நிதி 62 உறுப்பினர்களுக்கும், மருத்துவ நிதி 42 உறுப்பினர்களுக்கும், மரண நிதி 30 உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினை இனி வரும் காலங்களிலும் தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் நடைமுறைப்படுத்துவதற்குரிய நிதிச் சமநிலையை பேணுவதற்கு ஏற்ற வகையில் நிதிப் பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்குரிய ஆலோசனைகளும் திட்டங்களும் முன்மொழியப்பட்டு, பரிசீலனையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான கருத்துக்களை உறுப்பினர்களிடமிருந்து பெற்று, அதற்கேற்ப நடைமுறைவிதியில் மாற்றங்களை கொண்டுவருவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது

வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் நடத்தப்பட்டுவந்த திக்கம் வடிசாலையின் ஒப்பந்தக் காலம் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது பருவகாலம் ஆரம்பித்திருப்பதனால் கொத்தணியின் (8ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி சங்கப் பணியாளர் தாக்கப்பட்டார்

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளரான கணபதி மோகனதாஸ் இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்ததோடு, அவரிடமிருந்த சங்கத்துக்குச் சொந்தமான விற்பனைப் பணத்தையும் அவர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர். படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

## ஓய்வூதியத்தை அதிகரிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், தனது உறுப்பினர்களில் 60 வயதைப் பூர்த்திசெய்து ஓய்வு பெற்றுச் செல்லும் உறுப்பினர்களுக்கு (பணியாளர்) ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை கடந்த 2010ம் ஆண்டு ஆவணி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

உறுப்பினர்களின் பங்களிப்புக்கு ஏற்ற வகையில் மாதாந்தம் 5 வீத ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.


(8ம் பக்கம் பார்க்க)

**சிந்தனைத்துளி**

"நிதானத்தைக் கடைப்பிடி! அதுவே வெற்றியின் முதற்படி!" -அறிஞர்-

# கற்பகக்கரு

## நவீன தொழில்நுட்பம் அவசியம்!

1972ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பனை தென்னை வளச் சங்கங்கள் தமது சேவையின் 40 ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளது என்பதை நாம் எண்ணும்போது இந்நிறுவனங்கள் கடந்துவந்த பாதையினை திரும்பிப் பார்ப்போமானால் எவ்வளவு கரடு முரடானது என்பது இந்நிறுவனங்களை உருவாக்கப் பாடுபட்டவர்களுக்கும் ஆரம்ப அங்கத்தவர்களுக்கும் அப்போது பணியாற்றிய பணியாளர்களுக்கும் மட்டுமே நன்கு புரியும்.

கூட்டுறவு அமைப்பாக சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டமையும் அதன் தொழிற்பாடு ஆரம்பத்தில் மது உற்பத்தி விற்பனவு என்ற ஒரே ஒரு செயற்பாட்டை மட்டுமே கொண்டிருந்தது. பின்னர் தமது வளங்களை படிப்படியாக பன்முகப்பயன்பாட்டுக்கு உட்படுத்தத் தொடங்கியமையும் இந்நிறுவனங்களின் வளர்ச்சியில் பேருதவி புரிந்தன.

இவ் அமைப்பு ஒரு கூட்டுறவுச் சட்டத்துக்குள் பதிவுசெய்யப்பட்டு, கூட்டுறவுத் திணைக்களத்தின் பூரண ஆலோசனை, வழிகாட்டல் மூலம் இயங்கி வருகின்றது. அதேபோல மதுவரித் திணைக்களமும் இச்சங்கங்களுக்கு கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக தமது ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் புரிந்துணர்வோடு வழங்கி துணைபுரிந்துள்ளமையால் இந்நிறுவன வளர்ச்சிக்கு இரு திணைக்களங்களும் துணைபுரிந்துள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

மேலும் எமது சங்கங்கள் பாரிய நிதிச் செலவில் நவீன கிளை நிலையங்களை உருவாக்கி செயற்படுகின்றபோது இது நிதி வருவாயை ஈட்டக்கூடிய ஒரு வழியாக இருக்கின்றபோதிலும் இதற்கான அனுமதிகள் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய நிலையில் எமது நிறுவனங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையை தவிர்ப்பதற்கு நாம் எமது வளத்தை அதிக அளவில் உபஉணவு உற்பத்திக்கு பயன்படுத்தி எல்லா மக்களும் பயன்பெறத்தக்க வகையில் செயற்படுவோமானால் மேற்படி சிரமங்களை எதிர்நோக்குவதை தவிர்ப்பதுடன், எமது வளர்ச்சிக்கும் அது உறுதுணையாக இருக்கும்.

இச்செயற்பாடுகளை ஒரு சில சங்கங்கள் சிறப்பாக மேற்கொண்டு வெற்றிபெற்றதன் காரணமாக இச்சங்கங்களின் உறுப்பினர்கள் அவை சார்ந்தவர்கள் பொருளாதார ரீதியாக நன்மைகளைப் பெற்றுள்ளதுடன், அரச, அரச சார்பற்ற பல நிறுவனங்களின் பாராட்டுக்களையும் நிதி உதவிகளையும் பெற்றுள்ளமை நாம் அறிந்ததே.

இச்சங்கங்களின் முன்னுதாரணமாக செயற்பாட்டை அடியொற்றி ஏனைய சங்கங்களும் செயற்பட்டு எதிர்காலத்தில் தமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அதன்மூலம் அச்சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் வித்திடவேண்டுமென்ற அவா உரியவர்களுக்கு ஏற்படும்போதுதான் மேற்படி இலக்கை எட்டமுடியும் என்ற உண்மையை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே மாறிவரும் உலக ஒழுங்குக்கு ஏற்ப இவ்வளம் சார்ந்த நுகர்வோரின் தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்திசெய்வதற்கு எவ்வாறான யுக்திகளையும் மாற்றங்களையும் எமது செயற்பாட்டில் புகுத்த வேண்டும் என்பதை இத்துறைசார்ந்தவர்களின் ஆலோசனைகளைப்பெற்று, உரிய திட்டங்களை வகுத்து செயற்படுவோமானால் இந்நிறுவனங்கள் நீண்ட நெடுங் காலத்துக்கு நிலைத்து நின்று சேவையாற்ற முடியும் என்பதை கற்பகம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்" ஆசிரியர்

# கெருடாரூட வாக்கியம் 1

பாம்புகள், பாம்புக் கடிகள், அதற்கான மருந்துகள் தொடர்பாக கூறும் கெருடாரூட வாக்கியத்திலிருந்து சில பகுதிகள்

### சர்ப்பங்களுற்பவம்

காசிபப் பிரஜாபதிக்கு தக்ஷப்பிரஜாபதியின் புத்திரியாகிய கத்துருவை வயிற்றிற் பிறந்த நாகர் அனைவரும் பிர்ம ஜாதியென்று சொல்லப்படுவர். எனினும் பிர்ம ஜாதிக்கு ஒழுக்கமுடைய நாகர்தாம் பிர்ம ஜாதியாவார். அவர் சத்துவ குணாதிக்கமுள்ள வெள்ளிய நிறத்தைப் பெற்றிருப்பர். சாந்த குணமில்லாமல் கோபாவேசத்தை மேற்கொண்டு நீதிவழிபடும் நாகர் க்ஷத்திரியராவர். இந்நாகர் சத்துவத்தில் இராசத குணாதிகத்தை மேற்கொண்டு செம்பொன் நிறத்தைப் பெற்றிருப்பர். பிறருக்கு உபகாரமும் உபத்திரவமுஞ் செய்யாமல் தன் காரியத்தில் கண்ணாயிருக்கும் நாகர் வைசியரெனப்படுவர். இவர் சத்துவத்தில் சுத்ததமோ குணத்தை மேற்கொண்டவராய் மஞ்சள் வர்ணத்தைப் பெற்றிருப்பர்.

பிறரது வாழ்க்கையில் பொறாமை உடைய நாகர் சூத்திர ஜாதியாவார். இவர் சத்துவத்தில் கேவல தமோ குணத்தை மேற்கொண்டவராகி இந்திரனது குதிரையின் வாலை விஷமூட்டிக் கறுப்பாக்கிய கார்கோடகனும், அவனுக்கு உதவியாயிருந்த பதுமனுமாகிய இருவரும் தந்திர சாமர்த்தியத்தினால் கருமை நிறம்வாய்ந்த சூத்திரர். ஆகவே பிராமணரிற், பிராமணர், பிராமணரிற் க்ஷத்திரியர், பிராமணரிற் வைசியர், பிராமணரிற் சூத்திரராகி எண்வகை நாகரும் பிராமணரேயாகும்.

பிரமச் சத்திரிய வைசிய சூத்திரரென நான்கு ஜாதிகளுண்டு. இந்த நான்கு ஜாதிக்கும் நான்குவித ஆண்சர்ப்பமுண்டு.

### அஷ்ட நாகங்களின் பெயர்கள்

ஆனந்தன், குளிகன், வாசுகி, சங்கபாலன், தக்கன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன் என்று அஷ்ட நாகங்கள் உண்டு.

### நாகங்கள் உற்பத்தி

சர்ப்பங்கள் எட்டில் பிர்ம க்ஷத்திரிய வைசிய ஜாதி சர்ப்பங்கள் 248 முட்டைகளிடும். அந்த முட்டைகளை ஏழு நாட்களுக்குள் சாப்பிட்டுக் கடைசி 16 முட்டைகள் மட்டுமே வெடித்துக் குட்டிகள் வெளியேறித் தனித்தனியே பிரிந்து, புற்றுப் புதர்களில் நுழைந்து பெரிதாகி நிறத்துக்குத்தக்க பெயருண்டாகும். பின்னர் அவைகள் பாழடைந்த கோவில்களிலும் காடுகளிலும் இருக்கும்.

சூத்திர ஜாதிச் சர்ப்பத்துக்கு பறைப்பாம்பு என்று பெயர். அது சகல இடங்களிலும் கற்களுக்கிடையிலும் செடியடர்ந்த இடங்களிலும் கற்றாழைப் புதர்களிலும் இருக்கும்.

### முட்டையிடும் கணக்கு

இந்தப் பாம்புகள் 400 முட்டைகள் இடும். அந்த முட்டைகளில் சிலவற்றை ஏழு நாட்களுக்குள் சாப்பிட்டுவிடும். மீதம் 10 முட்டைகள் வரை வெடித்து குட்டிகள் வெளியேறி செடிகளிலும் கற்றாழைகளிலும் இருந்து வாழும். இந்தச் சர்ப்பம் இடுகின்ற முட்டைகளிலெல்லாம் உழுந்து வாடை வீசும்.

-வளரும்-

## நாம் நெகிழ்வுப்போக்கை............... 1ம் பக்கத் தொடர்ச்சி

பொறுப்பதிகாரிகள், அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் சமாசத் தலைவர், பொதுமுகாமையாளர், சங்கங் கங்கள், கொத்தணிகளின் தலை வர்கள், பொதுமுகாமையாளர் கள் ஆகியோரும் கலந்துகொண் டனர்.

கூ.அ.உதவி ஆணையா ளர் தனது கருத்துரையின்போது, பனை தென்னை வளச் சங்கங் கள் எதிர்நோக்கும் பிரச்சினை கள் தொடர்பாக பனை அபிவிருத் திச் சபையுடனும் மதுவரித் திணைக்களத்துடனும் கூட்டுறவுத் திணைக்களம் இணைந்து ஒற்று மையாக செயற்பட்டு இந்நிறுவ னங்களின் சீரிய வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் அவற்றுக் கான உதவிகளையும் வழங்கும் நல்நோக்குடனேயே இங்கு கூடி யுள்ளோம் எனக் குறிப்பிட்ட அவர், பின்வரும் ஆலோசனைக ளையும் சங்கங்கள் பின்பற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொண் டார்.

- மாறிவரும் உலக மாற்றத் துக்கும் சூழ்நிலைக்குமேற்ப கிளை நிலையங்கள் வடிவமைக் கப்பட வேண்டும்.
- கிளை நிலையங்களில் விலைப்பட்டியல் கட்டாயமாக காட்சிப்படுத்தப்படவேண்டும்.
- உரிய நேரத்துக்கு கிளை நிலையங்களைத் திறந்து மூடு தல் வேண்டும்.
- சங்க அங்கத்தவர்கள், பணி யாளர்கள் தாம் சார்ந்த சங்கங் கள் சிறப்பாகச் செயற்பட விசுவா சமாக உழைக்க வேண்டும்.
- சங்கத்தின் சகல பகுதி வரு மானங்களும் சங்கத்தின் கணக் குப் பகுதியினரால் சரியாக பதிவு வைக்கப்படல் வேண்டும். என்றார்

பனை அபிவிருத்திச் சபை த் தலைவர் தனதுரையின்போது, இச்சங்கங்கள் உருவாக்கப்பட் டதன் நோக்கம் அடக்கப்பட்ட ஒடு க்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக பாடுபடுவதே ஆகும். இவர்களுக்காக எமது பனை அபிவிருத்திச் சபை எப் போதும் உதவிகளை வழங்கும். கடந்தகால யுத்த சூழ்நிலைக ளில் இச்சங்கங்கள் பாதிக்கப்பட் டிருந்தன. தற்போது அச்சூழல் மாறியுள்ளது. எனவே இங்கு கூடியிருக்கும் நாம் இவ்வளத்தை நம்பி வாழும் மக்களைக் கொண்ட இவ் அமைப்பின் மூல கர்த்தாவாகிய சீவல் தொழிலா ளர்களின் வாழ்வாதார மேம்பாட் டுக்காக எம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்க வேண் டிய பொறுப்புள்ளவர்களாக நாம் இருக்கின்றோம். எனவே அவ் உதவிகளை வழங்க நாம் அனை வரும் முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் இச்சங்கங்களால் உருவாக்கப்பட்ட கிளை நிலை யங்கள் ஒருசிலவற்றைத் தவிர மிகுதி அனைத்தும் பழைய நிலையிலேயே இருப்பதை அவ தானித்துள்ளேன். இக்கிளை நிலையங்களை நவீனமயப்படு த்த இவ்வாண்டு சங்கங்கள் முனைப்புடன் செயற்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அடுத்து, மதுவரி உதவி ஆணையாளர் தனதுரையின் போது, நாம் இச்சங்கங்களுக்கு எம்மாலான அனைத்து உதவிக ளையும் ஏற்கனவே வழங்கியிரு க்கின்றோம், வழங்கி வருகின் றோம். இனியும் வழங்குவோம். எமது அதிகாரிகளும் நல்ல முறையில் நெகிழ்வுத் தன்மையு டன் செயற்பட்டு வருகின்றார்கள். மேலும் சங்கங்கள் மதுவரிக் கட் டளைச் சட்டத்துக்குட்பட்டு செய ற்படவேண்டிய சூழ்நிலை உரு வாகியுள்ளது. அதற்கு ஏற்றாற் போல கிளை நிலையங்களில் அடிப்படை வசதிகளையாவது சங்கங்கள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இவ்வசதிகளை ஜூன் மாதத்துக்குள் சங்கங்கள் செய்து முடிப்பது நன்மை பயக்கும் என நினைக்கின்றேன். அடிப்படை வசதி எனும்பொழுது நீர் வசதி, மலசலகூட வசதி மற்றும் தூய் மையாக வைத்திருத்தல் போன்ற வற்றுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

சமாசத் தலைவர் தனது உரையின்போது, கூட்டுறவுத் திணைக்களத்தின் உதவிகள் ஆலோசனைகள் எவ்வளவு முக் கியமோ அதேபோல மதுவரித் திணைக்களத்தின் உதவிகளும் ஆலோசனைகளும் ஒத்துழைப் புக்களும் எமக்கு மிகவும் தேவை யானது. எமது நிறுவனம் மது வோடு சம்பந்தப்பட்ட செயற்பாடு களில் ஈடுபட்டிருப்பதனால் அவர் களோடு எவ்வேளையிலும் தொட ர்புகளைப் பேணிக்கொள்பவர்க ளாக இருக்கின்றபடியால் இவ் உறவுகளை சுமூகமாக பேணி க்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## பதவி உயர்வைப்பெற சில ஆலோசனைகள்!

- அலுவலகத்தில் எல்லோ ருக்கும் நல்லவராக நட்புடன் நடந்துகொள்வதைவிட, கட மையுணர்வுடன் செயற்படு வதே சிறந்தது.
- தம்முடன் பணியாற்றும் சக பணியாளர்கள் தவறு செய்யும்பட்சத்தில் அல்லது தாம் சார்ந்த பணியில் தவறு கள் ஏற்படும் பட்சத்தில் அவை சுட்டிக்காட்டப்படும் போது அதனை ஏற்றுக்கொள் ளும் மனநிலை உள்ளவராக இருக்க வேண்டும்.
- உங்களிடம் ஒப்படைக்கப் படும் எப்பணியாக இருந்தா லும் அப்பணியில் அதிக சிரத் தை எடுங்கள்.
- நீங்கள் பணியாற்றும்துறை சார்ந்த புதிய விடயங்களை முழுமனதோடு கற்றுக்கொள் ள முன்வரவேண்டும்.
- நீங்கள் பெறும் பயிற்சிகள் நீங்கள் சார்ந்த பணிகளை இலகுவாகவும் விரைவாகவும் சரியாகவும் செய்துமுடிக்கும் திறன்பெற்றவர்களாக உங் களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- பதவி உயர்வு என்பது திற மைக்கு கிடைக்கும் அங்கீகா ரம் ஆகும். குறுக்கு வழியில் அதனைப்பெற முயற்சிக்கக் கூடாது.
- ஒவ்வொரு பணியாளரும் தாம் தலைசிறந்த பணியாள ரென எண்ணும்படியாக கடின உழைப்பு, விசுவாசத்துடன் திறமையாகப் பணியாற்றும் மனப்பாங்கு மாற்றம் அவசி யம்.
- பதவி உயர்வுகளை எதிர் பார்க்கும் பணியாளர்கள் பேச் சைக்குறைத்து திறமைகளை செயலில் காட்டவேண்டும்.
- உயரதிகாரியின் எண்ணப் பாங்கை உணர்ந்து எமது பணி களை செய்யவேண்டும்.



# தரம்—5 புலமைப்பரிசில் பரீட்சை—2013

## பயிற்சி வினாத்தாள்—1

தொகுப்பு: செல்வி மதனரூபி-பாரதிதாசன் (ஆசிரியை)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு கற்பகத்தில் வெளிவந்துள்ள பயிற்சி வினாத்தாளுக்குரிய விடைகளை சுயமாக கண்டறிந்து பிறிதொரு தாளில் விடைகளை எழுதி இவ்வினாத்தாளுடன் இணைத்து அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன் "ஆசிரியர், கற்பகம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடைஎழுதுபவர்களின் பெயர் விபரங்கள் கற்பகத்தில் பிரசுரிக்கப்படும்.

### பகுதி-1

❀ மிகவும் சரியான விடையின்கீழ் கீறிடுக.

01) நாங்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆர்வமுடன் கல்வி ....................?

i) கற்பேன் ii) கற்பார்கள் iii) கற்போம் iv) கற்றாள்

02) கீழே தரப்படுள்ள சொற்களில் எழுத்து வழு உள்ள சொல் எது?

i) எண்ணெய் ii) கவற்ச்சி iii) ஒற்றடம் iv) புகழ்ச்சி

03) தயவு என்பதை விளக்கும் இன்னுமொரு இணைமொழி எது?

i) ஈவிரக்கம் ii) அணைதுணை iii) பாரதூரம் iv) அருமைபெருமை

04) உங்கள் பாடசாலையிலிருந்து மிகத்தூர உள்ள இடங்களுக்கு சௌகரியமாக பயணம் செய்ய உதவும் வாகனம் எது?

i) கார் ii) லொறி iii) புகையிரதம் iv) பேருந்து

05) தாவரங்களின் வளர்ச்சிக்கு தேவையற்ற காரணி எது?

i) சூரிய ஒளி ii) நீர் iii) பசளை iv) பூச்சிகள்

06) How Much என்பதன் தமிழ் வடிவம் யாது?

i) என்ன ii) எத்தனை iii) யார் iv) எப்படி


07) 2, 8, 4 ஆகிய மூன்று இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண் யாது?

i) 284 ii) 842 iii) 428 iv) 482

08) 9438 என்ற எண் குறியில் இலக்கம் 4இன் இடப்பெறுமானம் யாது?

i) ஆயிரம் ii) ஒன்று iii) பத்து iv) நூறு

09) என்பதை உரோமன் இலக்கத்தில் எழுதினால்?



அருகில் தரப்பட்டுள்ள எண் சட்டத்தினால் வகை குறிக்கப்படும் எண்குறி எது?

i) 2041 ii) 2401

iii) 2104 iv) 4012

10) 2013 மாசி மாதம் 28ம் திகதி வியாழக்கிழமை எனின், பங்குனி 1ம் திகதி என்ன கிழமை?

i) திங்கள் ii) புதன் iii) சனி iv) வெள்ளி

### பகுதி-2

❀ பின்வரும் துண்டுப்பிரசுரத்தை வாசித்து, அது தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அன்பார்ந்த பொதுமக்களே!

டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

டெங்கு காய்ச்சல் அபாயத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள நீங்கள் செய்யவேண்டியது என்ன?




01) இத்துண்டுப் பிரசுரத்தை எப்பகுதியினர் வெளியிட்டுள்ளார்கள்? 02) இத்துண்டுப் பிரசுரத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள செய்தி யாது? 03) இத்துண்டுப் பிரசுரத்தில் இடம்பெற்றுள்ள பழமொழி யாது? 04) இத்துண்டுப்

பிரசுரம் யாரை விழித்து கூறப்பட்டுள்ளது?

05) டெங்குக் காய்ச்சல் அபாயத்திலிருந்து உங்களைப் பாதுகாக்க நீங்கள் செய்யவேண்டியது என்ன?

❁ கீழே தரப்படும் சொற்களின் ஆங்கிலப் பதத்தை தருக?

06) மருத்துவமனை-....... 07) அன்பு- ........ 08) நீர் - ...........

❁ கீழே தரப்படும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை தருக?

09) Where-....... 10) Happy Birthday- ........

❁ கீழே தரப்படும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் தருக?

06) பஹய்-................. 07) கிரிபொன்ன- ..................

❁ கீழே தரப்படும் தமிழ்ச்சொற்களின் கருத்தை சிங்களத்தில் தருக?

06) அதிபர்-................. 07) ரோசாப்பூ- .................

❁ கீழே தரப்படும் விலைப்பட்டியலை அவதானித்து அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக?

| பொருட்கள் | ரூபா | சதம் |
|---|---|---|
| அங்கர் பால்மா பைக்கற் | 240 | 00 |
| சீனி 1 கிலோ கிராம் | 98 | 00 |
| பருப்பு 1 கிலோ கிராம் | 120 | 00 |
| சவர்க்காரம் - லக்ஸ் 1 | 38 | 00 |
| தேங்காய் 1 | 52 | 00 |
| மொத்தம் | 548 | 00 |

15) 3 பால்மா பைக்கற்றுக்களின் விலை யாது?
16) 2.5 கிலோகிராம் சீனியின் விலை யாது?
17) 250 கிராம் பருப்பின் விலை யாது?
18) 1/4 டசின் சவர்க்காரக் கட்டிகளின் விலை யாது?
19) 4 தேங்காய்களின் விலை யாது?
20) விலைப்பட்டியலிலுள்ள பொருட்களை வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?

❁ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தருக ?

21) XXVii + Xiii உரோம எண்களின் கூட்டுத்தொகையை உரோம எண்குறியில் தருக?
22) தூக்கம் வந்தால் தாமாகவே மூடும் கதவுகள் எவை?
23) சிங்கள மக்களின் தேசிய உணவு எது?
24) இலங்கையின் தேசிய கீதத்துக்கு இசையமைத்தவர் யார்?
25) வடக்கு மாகாணத்தின் தலைநகரம் யாது?

❁ கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

26) குழந்தையை உறங்கச் செய்யும்போது தாலாட்டுப் பாடலைப் பாடி மகிழ்வர். ( )
27) அஞ்சல் அலுவலகங்களில் நோயாளிகளுக்கு சிகிச்சை கொடுக்கப்படும். ( )
28) சந்தேகத்துக்கிடமான பொருட்கள்/நபர்கள் பற்றி அறிவிக்க வேண்டிய இலக்கம் 119 ஆகும். ( )
29) இலங்கையின் தேசிய மலர் நீலோற்பவம் ஆகும். ( )
30) வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகும். ( )

❁ நீங்கள் அதிகாலை வேளை நித்திரை விட்டெழுந்தபோது உங்கள் மனதில் உதித்த எண்ணங்களை 6 வாக்கியங்களுக்குள் எழுதுக? (எழுவாய், பயனிலை உட்பட நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்)

## விடைகள்

**பகுதி 1**

01) iii
02) ii
03) i
04) iv
05) iv
06) ii
07) ii
08) iv
09) iii
10) iv

**பகுதி 2**

1) சுகாதாரப் பகுதியினர்
2) டெங்கு தொடர்பான விழிப்புணர்வு
3) வெள்ளம் வரும்முன் அணை கட்டுவோம்
4) அன்பார்ந்த பொதுமக்களை
5) குப்பைகளை கண்டகண்ட இடங்களில் போடாமல் தவிர்த்தல், சுற்றுப்புறங்களில் நீர் தேங்கி நிற்பதைத் தடுத்தல், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருத்தல்.
6) Hospital
7) Love 8) Water
9) எங்கே?
10) பிறந்தநாள் வாழ்த்துக்கள்
11) ஐந்து
12) பால் குடியுங்கள்
13) விதுஹல்பதி
14) ரோசமல
15) ரூபா 720.00
16) ரூபா 245.00
17) ரூபா 30.00
18) ரூபா 114.00
19) ரூபா 228.00
20) ரூபா 548.00
21) XL
22) கண்ணிமைகள்
23) பாற்சோறு
24) ஆனந்தசமரக்கோன்
25) யாழ்ப்பாணம்
26) ✓
27) ✗
28) ✓
29) ✓
30) ✓



# மோட்சம்!

சிறுவர்களாய் நாளும்
சிறகடித்தும் பறந்தோம்
கல்விச்சாலை சென்று - பல
கல்விதனை பயின்றோம்

இளமைக்காலம் மனதில்
இனிய தாளம்போட
இளவல்களோ நாங்கள்
காதலிலே விழுந்தோம்-அது?

கானல் நீராய் இங்கே
கருகிப் போனதாலே
கானகத்தை நோக்கி
ஞானம் வேண்டப் போனோம்

நோயில் வாழ்ந்த நேரம்
நோவும் வலியும் நீங்க
நாவின் சுவைகள் அடக்கி
நாம் பத்தியங்கள் காத்தோம்

மூப்பு வந்த நேரம்
முதுமைதானும் வாட்ட
மோட்சம் போக எண்ணி -நாம்
இறைவனை பணிந்தோம்

வல்லைவாசன்,
அச்சுவேலி

# நம்மவரின் நடப்பு!

நான்கு வயதுச் சிறுமி மீது
பாலியல் வன்புணர்வு!
அறுபது வயது மூதாட்டி
கழுத்து நெரித்துக் கொலை!
மனநலம் குன்றிய யுவதியின் சடலம்
கிணற்றிலிருந்து மீட்பு!
பலரால் சீரழிக்கப்பட்டபின்
கொல்லப்பட்டதாய் மருத்தவ அறிக்கை!!!
இன்றைய தினசரிகளில்
இவைதான் செய்திகள்
எங்கள் பண்பாடு எங்கள் தனித்துவம்
எங்களுக்கேயான சிறப்பு
போச்சு! ஏல்லாமே போச்சு!!
வீதிக்கொரு கோயில் கட்டி
விழுந்து விழுந்து கும்பிட்டும் நடப்பதென்ன?
மனிதம் செத்துப்போனதாய்
மனதுக்குள் அழுதென்ன?
மனித மிருகங்கள் உயிர்த்தெழுந்து
கொடிய பூமியாய் எங்கள் தேசம்
எனியிங்கு.....
இயேசு பிறந்தென்ன புத்தர் வந்தென்ன
அறுபத்துனான்கடியில்
ஆஞ்சநேயரை வைத்தென்ன
அம்மனை முருகனை
ஆனானப்பட்ட சிவனை எல்லாம்
விழுந்து விழுந்து தொழுதென்ன
நெய்விளக்கேற்றி விரதமிருந்து
காவடி எடுத்தென்ன....?
நடக்கப்போவதென்னவோ
தாயைக் கற்பழித்தான் தனயன் எனும்
தலைப்புச் செய்தியின் வருகைதான்!
சீ...! நாயிலும் கேவலம் நம்மவரின் நடப்பு!

-தே.யோ.தவராஜா-

# இனி ஒரு விடிவு



தண்டவாளம் இல்லாமல்
புகைவண்டி ஓடவில்லை
அது ஒரு காலம்
தண்டவாளம் இருந்தும்
புகைவண்டி ஓடும்(மா)
இனிவரும் காலமதில்?

# இழந்தது இழந்ததுதான்

சொத்து இழந்து
சொந்த உறவு இழந்து
நிம்மதி இழந்த வாழ்வும் வாழ்ந்து
தவியாய் தவிக்கும் என் உறவுகளே!
இப்போ சொந்த ஊருக்கு விடுகின்றபோது
சொத்து சேர்க்க ஆசைப்பட்ட உறவே
இப்போ சொந்த காலை இழந்துசோகமா
இருக்கின்றாயே இழந்தது இழந்ததுதான்
இனியும் முயற்சி கொள்ளாதே!

-எஸ்.எம்.ராஜா-



# கறிவேப்பிலை

பச்சை இலைகள் சிறிது கசப்பாக இருந்தாலும் எண்ணெயில் போட்டு தாளிக்கும்பொழுது அருமையான வாசத்தை ஏற்படுத்தும்.

இந்த இலைகளை நாம் வெறும் வாசத்துக்கு மட்டும் தாளிப்பில் சேர்த்துவிட்டு சாப்பிடும் பொழுது ஒதுக்கிவிடுகிறோம். ஆனால் கண்டிப்பாக நாம் இவற்றை உணவோடு சேர்த்தே உட்கொள்ள வேண்டும். கறிவேப்பிலையை பொடி செய்து சோற்றுடன் சேர்த்து சாப்பிடலாம், சட்னியாகச் சேர்த்து தினமும் சாப்பிடலாம். இது எமது உடலுக்கு மிகவும் நல்ல பயனைத் தரும். இதில் நார்ச்சத்து, விற்றமின்கள், மினரல் என்பன அடங்கியுள்ளன. மருத்துவக்குணங்கள் நிறைந்துள்ளன. கறிவேப்பிலை சமிபாட்டுக்கு மிகவும் உதவும். மேலும் இளநரையைத் தடுக்கும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவல்லது.

# "கிளினிக்" முறை வேண்டும்

வயதோ நாற்பது
வடிவமோ கூட்டுறவு
எழுபத்தி இரண்டினிலே
பிரசவித்தாய்
இருபத்தி இரண்டினிலே
குமரன் ஆனாய்
முதுமை அடைந்து இப்போ
நாற்பதைத் தொட்டுவிட்டாய்
பொருள் வளத்தினோடு
புகழ் வளமும் சேர்த்து விட்டாய் - இனி
அருள் வளத்தைத் தேட
ஆர்வமுடன் புறப்படுவாய்
இவ்வேளை நோய்த்தாக்கம்
மெல்ல நுழைவது கண்கூடு
ஆனதினால் "கிளினிக்" முறைகொண்டு
நோய் தடுக்கப் புறப்பட்டால்
சத்திர சிகிச்சைக்கு
சாவு மணி அடித்திடலாம்

இ.காந்தன்

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், வடமாகாண மதுவரித் திணைக்களம் மற்றும் பனை அபிவிருத்திச் சபை ஆகியன இணைந்து நடத்திய பனை தென்னை வள நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போது .....







## முடியுமானால் செய்யுங்கள்!

- உழைக்க நேரத்தை எடுத்துக்கொள்; அது வெற்றியின் விலை.
- சிந்திக்க நேரத்தை எடுத்துக்கொள்; அது சக்தியின் ஊற்று.
- விளையாட நேரத்தை எடுத்துக்கொள்; அது இளமையின் இரகசியம்.
- படிப்பதற்கு நேரத்தை எடுத்துக்கொள்; அது அறிவின் வாயில்.
- நல்லவை புரிய நேரத்தை எடுத்துக்கொள்; அது மகிழ்ச்சியின் பாதை.
- கனவுகாண நேரத்தை எடுத்துக்கொள்; அது சாதனைக்கு வழி.
- அன்புகாட்ட நேரத்தை எடுத்துக்கொள்; அது இறைவனின் கொடை.
- சேவைபுரிய நேரத்தை எடுத்துக்கொள்; அது வாழ்க்கையின் இறிக்கோள்.
- சிரித்துமகிழ நேரத்தை எடுத்துக்கொள்; அது இதயத்தின் இன்னிசை.

## வழிகாட்டி

- சிந்தனையும் செயலும் ஒன்றாகி விட்டால் வாழ்க்கையில் வெற்றியை எளிதில் பெற்றுவிடலாம்.
- பிரதிபலனை எதிர்பார்த்து பாராட்டுகிற அன்பு தூய அன்பு அல்ல. கைமாறு கருதாது கொள்ளும் தூய அன்பே தெய்வீக அன்பு ஆகிறது.
- அன்பும் சாந்தமும் உடையவனே பலமும் மனோதைரியமும் உடையவன் ஆவான்.
- நம்பிக்கை பூரணமாய் இருக்க வேண்டும். ஆனால் குருட்டுத்தனமாய் இருக்கக் கூடாது.
- இன்பம் வருகின்றபோது அதுபற்றிச் சிந்தனை செய்யாதீர்கள். அது போகும்போது சிந்தனை செய்யுங்கள்.
- சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்.

## கை மருத்துவமும் அதன் மகத்துவமும்

- வாய்ப்புண் குணமாக அகத்திக் கீரை மற்றும் மணல்தக்காளிக் கீரை சமைத்து சாப்பிட்டால் 2 நாட்களில் குணமாகும்
- அத்தி இலையை அடிக்கடி உண்டுவர உதட்டுப்புண், வாய்ப்புண் குணமாகும்.
- மாதுளம்பழம் அடிக்கடி சாப்பிட்டுவந்தால் ஞாபக சக்தி அதிகரிப்பதுடன், எலும்புகள், பற்கள் என்பன உறுதிப்படும்.
- சீரகத்தை வறுத்து பொடி செய்து வாழைப்பழத்துடன் சாப்பிட்டால் சுகமான நித்திரை வரும்.
- நெல்லிக்காய்ச்சாறு ஒரு அவுன்ஸ் குடித்தால் எப்படிப்பட்ட கிறுகிறுப்பும் குணமாகும்.
- வேப்பம்பூவை வறுத்துப் பொடிசெய்து பருப்புடனும், இரசத்துடனும் கலந்து சாப்பிட வாந்தி நிற்கும்.
- தென்னம்பூவை மென்று தின்றுவர உள்ரணம் ஆறும்.
- தாகம் தாகம் என்று மிகத் தாகமாக இருப்பவர்க்ள் அரச இலையை ஊறவைத்து நீரைப் பருகிவர தீரும்.
- பசியைத் தூண்டி தாதுக்களின் தன்மையை துவளச் செய்யும் தன்மை முள்ளிக்கீரைக்கு உண்டு.
- மூட்டுவலி, தசை வீக்கம், நரம்புப் பிசகு ஆகிய நோய்களுக்கு நொச்சிச் சாற்றைப்பூசி குணம்பெறலாம்.
- ஓமத்தை நீர் விட்டு அரைத்து களிபோல் கிளறி இளஞ்சூட்டில் வீக்கம், வலி உள்ள இடங்களில் பற்றுப்போட குணமாகும்.
- வெங்காயச் சாற்றை கடுகு எண்ணெயில் கலந்து வலியுள்ள இடத்தில் தடவிவர வாத மூட்டுவலி குணமாகும்.
- பச்சைக் கற்பூரத்துடன் புதினா இலைச்சாற்றைக் கலந்து மூட்டு வலியுள்ள இடத்தில் தடவ மூட்டுவலி நிற்கும்.
- சுக்கை நீர்விட்டு நன்றாக அரைத்து அதைக் கொதிக்கவைத்து சூட்டுடன் மூட்டுக்களில் பூசி வந்தால் மூட்டுவீக்கம் குறையும்.

## ஒப்பந்தக்காலம்.......

1ம் பக்கத் தொடர்ச்சி

அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்றகள் விற்பனையின் பின் வீணே நிலத்தில் ஊற்றப்பட்டு வந்த நிலைமையினை தவிர்ப்பதற்கு மேற்படி வடிசாலை ஆரம்பிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை கொத்தணி நிர்வாகத்துடன் மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வடிசாலை இயங்குவதற்கான அனுமதிப் பத்திரத்தை பெறுவதற்கான நடவடிக்கையினை கொத்தணித் தலைவர் மேற்கொண்டுள்ளதாகவும் ஓரிரு தினங்களில் வடிசாலை வழமைபோல செயற்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஓய்வூதியத்தை..........

1ம் பக்கத் தொடர்ச்சி

இத்திட்டத்தின்மூலம் இதுவரையில் 54 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின்மூலம் வழங்கப்பட்டுவரும் 5வீத ஓய்வூதியத்தினை மேலும் 3 வீதத்தால் அதிகரித்து 8 வீதமாக வழங்குவதற்குரிய ஆலோசனைகள் முன்மொழியப்பட்டதன் அடிப்படையில் சங்கத்தின் நிதி நிலைமைகள் பற்றிய சாத்தியக் கூற்று அறிக்கை இயக்குனர் சபையில் ஆராயப்பட்டு, நிதி நிலைமையில் சாதகமான சூழ்நிலை காணப்படுவதால் இவ்வாண்டு (2013) தொடக்கம் ஓய்வூதிய அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அனைத்து உறுப்பினர்களிடமிருந்தும் கருத்துக்களைப்பெற்றுக்கொள்ள வேண்டுமென கடந்த மாதம் கூடிய நெறியாளர் சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## துயர் பகிர்கின்றோம்



எமது சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவராக இணைந்து சிறப்பாக தொழிற்பட்டு, சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், சித்த மருத்துவ உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் கடமையாற்றிய

### திரு ஆறுமுகம் மார்க்கண்டு

அவர்கள் கடந்த 04.03.2013 அன்று காலமானதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
சாவகச்சேரி பனை தென்னை வள அபி.கூட்டுறவுச் சங்கம்


எமது சங்கத்துடன் சுமூகமான உறவைப் பேணி, சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படும் உறுப்பினர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், வங்கி வாடிக்கையாளர்கள், நுகர்ச்சியாளர்கள், நலன் விரும்பிகள் மற்றும் சகோதர நிறுவனங்கள் அனைவருக்கும் இந்நேரத்தில் எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகிறோம்.

கிராமிய வங்கிச் சேவை

அரிய பல நலனோங்கும் திட்டங்களை உங்களுக்கு வழங்கும் வகையில் எமது கிராமிய வங்கியின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இவற்றின் நன்மைகளை நீங்களும் பெற்றுக்கொள்ள இன்றே எமது கிராமிய வங்கியுடன் இணைந்துகொள்ளுங்கள்!

தங்குமிட வசதி

குறிப்பிடத்தக்களவு வசதிகளுடன்கூடிய தங்குமிட வாடகைச் சேவையை எமது சங்கம் மேற்கொண்டு வருகின்றது. குறைந்த கட்டணமே எம்மால் அறவிடப்படுவதால் உங்களின் தங்குமிட தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள எம்மை நாடுங்கள்

அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

15, நடுத்தெரு லேன், அரியாலை. தொலைபேசி: 021 222 6336


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2013ம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.